2013 ஏப்ரல் 17]

249—

பட்டு நல வாரியம்

***7354—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் நெசவாளர்களுக்குப் பட்டு நல வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் நெசவாளர்களுக்குப் பட்டு நல வாரியம் அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் ஏணிப்படி, அம்மா, மக்களின் எண்ணப்படி எட்டிப்பிடிப்பேன் பார் என் அரியணைப்படி ஏறி, பொன்னி அரிசியை 20 ரூபாய்க்குத் தந்த பொன்னி வளத் தாயே என்று பாடி மக்கள் மனமகிழ்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி பகுதி காரைக்குடியில் பட்டுச்சேலை உற்பத்தியாளர்கள் 2,000 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு, வேலை வசதிவாய்ப்பின்றி வெளி மாநிலங்களுக்கும் வேறு மாவட்டங்களுக்கும் சென்று அந்தத் தொழிலைச் செய்துவருகின்றார்கள். அவர்கள் பட்டு நூல் கொள்முதல்கூட செய்ய வசதியில்லாத காரணத்தினால், வெளி ஊர்களுக்குச் செல்பவர்களுடைய வசதியின்மையைக் கருத்தில்கொண்டு, அங்கே கூடுதலாகக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அந்தப் பகுதியில் அவர்களுக்கு அரசு கடனுதவி செய்து பட்டுநூல் கொள்முதலுக்கு

உதவி செய்தால், அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். மேலும் காரைக்குடியில் நெய்துவரும் பட்டுச் சேலைக்கு அதிக வரவேற்பு மக்களிடத்தில் இருக்கிறது. அதேபோல, அந்தப் பகுதியிலே நெய்து வரக்கூடிய கைத்தறி ஆடைகளுக்கும் கைத்தறி சேலைகளுக்கும் அதிக வரவேற்பு இருக்கிறது. ஆகவே, அவர்கள் வாழ்க்கைத்தரம் மேம்படவும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் அந்தப் பகுதியிலேயே தொழில் செய்வதற்குக் கூடுதலான கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துத் தரவும் அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை, காரைக்குடி பகுதியில் 1,921 கைத்தறி நெசவாளர்கள் உள்ளனர். இராஜிவ் காந்தி சொசைடி, பழனிவேல்ராஜன் சொசைடி ஆகிய இரண்டு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களில் 421 கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். எஞ்சிய 1,500 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு அல்லாத மாஸ்டர் வீவர்களுடன் வேலை பெற்று வருகின்றனர். காரைக்குடி பகுதியில் பிரசித்தி பெற்ற செட்டிநாட்டு கண்டாங்கிச் சேலை இந்திய அளவில் இன்றையதினம் சிறப்பான முறையில் மக்களிடம் வரவேற்பைப் பெற்று விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. புதிய புவிசார் குறியீடு மூலம் இந்தச் சேலைகளை அந்தப் பகுதியிலேதான் நெய்ய வேண்டும் என்ற ஒரு உத்வேகத்துடன் சிறப்பான முறையில் துறை அதிகாரிகள் ஆய்வு செய்துகொண்டிருக்கின்றார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கேற்ப, புதியதாக கைத்தறி நெசவாளர் உறுப்பினர்கள், புதிய கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு முன்வந்தால் இந்தத் துறையின் மூலம் பதியதாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு பட்டு நூல் கொடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் இந்த கண்டாங்கிச் சேலை உற்பத்திக்கு துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும், இதுபோன்ற பல்வேறு இடங்களில் சிறப்பான முறையில் செயல்படுகின்ற இந்த கைத்தறி மற்றும் பட்டு நூல் துறையின் சார்பாக தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நூல் நல வாரியம் சிறப்பான முறையில் தொழிலாளர் நல வாரியம் மூலம்

2013 ஏப்ரல் 17]

சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றையதினம், இந்தத் துறையின் சார்பில் கிட்டத்தட்ட 7.31 கோடி ரூபாய் நிதியுதவி செய்யப்பட்டு, 31,360 நெசவாளிகள் சென்ற 2012-2013 ஆம் ஆண்டு பயன்பெற்றிருக்கின்றார்கள். ஆகவே, இதுபோன்று சிறப்பான முறையில் நெசவாளர்களுக்காகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு கைத்தறி நெசவாளர்களுக்காக மட்டுமல்ல, கைத்தறிப் பட்டு நெசவாளர்களுக்கு மட்டுமல்ல, எல்லா நெசவாளர்களும் பயன்பெறத்தக்க வகையில் இன்றையதினம் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு இந்த நல்ல திட்டங்கள் இந்த நல வாரியத்தின் மூலம் சிறப்பாக மக்களுக்காகச் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்,

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்தால், அதற்கு பட்டு நூல்கள் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்வேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதலிலே என் நன்றியைச் சொல்லி, இப்போது இருக்கக்கூடிய சங்கங்களின் மூலமாகவே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு அதிகமாக பட்டு நூல்களை வழங்கினால் அவர்களே கலர் பூசி, அந்த நூல்களை எடுத்து அதிக வரவேற்புள்ள செட்டிநாட்டுச் சேலைகளை விற்பனை செய்வதற்கும், அவர்கள் உற்பத்தி செய்வதற்கும் உதவியாக இருக்கும். ஆகவே, இப்போது இருக்கக்கூடிய சங்கங்களின் மூலமாகவே அதிக பட்டுநூல்களை வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 6 மாதங்களுக்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள்

திரு. உமாதேவன், திரு. முருகானந்தம், திரு. சந்திரன் போன்றவர்களோடும், சேர்மன் திருமதி கற்பகம் இளங்கோ ஆகியோரோடு சேர்ந்து ஆய்வுகள் செய்தோம். அங்கே செட்டிநாடு காட்டன் சேலைகள்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. பட்டு நெசவு அதிகம் இல்லை. இருப்பினும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பட்டு நெசவுக்காக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் தொழிலுக்காக வேறு இடங்களுக்குச் சென்று நூல்கள் வாங்கிவந்து நெய்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்கள். இந்தப் பகுதியைப் பொறுத்தமட்டில் இரண்டு சங்கங்களிலும் 60:60 பருத்தி இரக சேலைகள்தான் நெய்யப்படுகின்றன. இருப்பினும் பட்டு நூல் தேவைப்பட்டால், நெசவாளர்கள் முன்வந்து, 21 நெசவாளர்களுக்கு மேல் அங்கே சங்கம் அமைக்க முன்வந்தால் இத்துறைரீதியாக ஆராயப்பட்டு, புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டு அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற, பட்டு சேலைகள் மற்றும் காட்டன் சேலைகளுடன் சேர்ந்து, இத்துறை கோ-ஆப்டெக்ஸ்மூலம் வாங்கப்பட்டு அந்த நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு துறை சிறப்பான முறையில் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

250—

வீட்டுமனைப் பட்டா

***1527—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமாநேரி கிராமம், அம்பேத்கர் நகரிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?